பக்கங்கள் 17 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை 28.07.2024 அதிர்வு 363

## ‘மொட்டு’வின் முடிவை நாளை அறிவிப்பேன்

### மஹிந்த தகவல்



வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஸ்ரீலங்கா

04



# ரணிலின் வெற்றி உறுதி!

### அடித்துக் கூறுகின்றார் ரவி

“ரணிலால் மாத்திரம் தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்று அவர் குறுகிய காலத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார். எனவே, எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதியன்று நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தலில் ரணிலின் வெற்றி நிச்சயம்.”

– இவ்வாறு ஐக்கியத் தேசியக் கட்சியின் தேசிய செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

04

# ‘மொட்டு’ சார்பில் களமிறங்கி போட்டியிட எந்நேரமும் தயார்!

### தம்மிக்க எம்.பி. அதிரடி அறிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் எந்நேரமும் தயாராக இருக்கின்றார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“நான் மஹிந்த சிந்தனையால் ஈர்க்கப்பட்டவன். எனது பொருளாதார செயற்பாடுகள் அனைத்தும் மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டவை.

மொட்டுக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியிலும் போட்டியிடுவதற்கு நான் தயாரில்லை.” – என்றார்.





# முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ள தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு சில முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டம் யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்று நடைபெற்றபோதே பொதுக் கட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பு தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதியும் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினருமான அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

“தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் இன்று நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

அதாவது இந்தப் பொதுக் கட்டமைப்புக்குள் கீழ் வரக் கூடிய உப கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வேட்பாளர் யார் என்பதைத் தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையைத் தீர்மானிப்பதற்கும், கட்சி சின்னத்தை தீர்மானிப்பதற்குமான உப கட்டமைப்புக்கள், நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உப கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கட்டமைப்புக்களால் உரிய நேரத்தில் அந்தந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும்.” – என்றார்.















# யாழில் கறுப்பு ஜுலை நினைவேந்தல்!

## தமிழரசின் சுமந்திரன், சாணக்கியன் உள்ளிட்ட பலரும் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கறுப்பு ஜுலை படுகொலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மறறும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் தலைமையில் தந்தை செல்வா கலையரங்கில் நினைவேந்தல் நிகழ்வு இன்று மாலை நடைபெற்றது.



இதன்போது கறுப்பு ஜுலை கலவரத்தில் படுகொலை செய்யப்படவர்களுக்கு மதத் தலைவர்களால் பொதுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், மதத் தலைவர்கள், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், யாழ். வர்த்தக சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# வடகிழக்கு இளையோர் மீனவர் கூட்டு யாழில் சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடகிழக்கு இளையோர் மீனவர் கூட்டு என்ற புதிய ஒரு அமைப்பு யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக பொருளாதார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றில் இந்தக் கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கு சார்ந்த ஏழு மாவட்டங்களில் உள்ள இளம் மீனவர்கள் மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரணிலின்...

அவர் மேலும் கூறுகையில்,

"யாராலும் ஏற்க முடியாத சவாலை ஏற்று செய்து காட்டியவர் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அப்படிப்பட்டவர் தேர்தலில் போட்டியிடுவாரா, தேர்தலை நடத்துவாரா என்று சிலர் கேட்டார்கள். இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டவுடனேயே அவர் முதலாவது வேட்பாளராகக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். சுயாதீன வேட்பாளராக – பொது வேட்பாளராகவே அவர் போட்டியிடுகின்றார்.

திட்டமிட்ட திகதியில் அதாவது செப்டெம்பர் 21ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். சுதந்திரமான – நீதியான தேர்தலை நடத்துவதே ஜனாதிபதி ரணிலின் பிரதான நோக்கம்.

அவரால் மாத்திரம்தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்று அவர் குறுகிய காலத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்று மிகுதிப் பிரச்சினைகளை அவர் தீர்த்து வைப்பார். இந்தப் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்தான் சரியானவர் என்று இப்போது எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.


கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் ரணிலுக்கு வாக்களிக்காதவர்கள் இந்தத் தேர்தலில் அவரை ஆதரிப்பதற்காகச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவே, இந்தத் தேர்தலில் ரணிலின் வெற்றி நிச்சயம்." – என்றார்.

## மொட்டுவின்...

பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு நாளை திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ எம்.பி.தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் களமிறக்குவதா அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படுமா என்பது தொடர்பில் கட்சியே தீர்மானிக்கும் என்றும் மஹிந்த குறிப்பிட்டார்.

கட்சியால் எடுக்கப்படும் முடிவு தன்னால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் மஹிந்த மேலும் கூறினார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாடம் படிப்பார் ரணில்!

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமை தவறு என்று தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள உயர் நீதிமன்றம், மனுக்கள் மீதான விசாரணை முடிவடையும் வரை தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றுவதற்குத் தடை விதித்திருக்கின்றது. அதே சமயம் இக்காலகட்டத்தில் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும்படி ஜனாதிபதிக்கு வழிகாட்டல் பரிந்துரை ஒன்றையும் உயர்நீதிமன்றம் செய்துள்ளது.

ஆனால், உயர் நீதிமன்றத்தின் இந்த முடிவை - உத்தரவை - ஏற்க மறுத்து, 'விடாக்கண்டன் கொடாக்கண்டனாக' பிடிவாதம் பிடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்விடயத்தில் தனது நரித் தந்திரசாலித்தனத்தை காட்டக் காய்களை நகர்த்துகின்றார்.

அவரது தற்போதைய பதவிக்காலம் இன்னும் ஒன்பது வாரங்கள் மட்டுமே. அதற்குள் இந்த விடயத்தில் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு பாடம் படிப்பிக்க அவர் இரட்டைத் தட நகர்வு ஒன்றை முன்னெடுக்கின்றார்.

வழமையாக உயர்நீதிமன்றத்தின் முடிவு இறுதியானதாகும். அதற்கு மேல் மேன்முறையீடு செய்ய இடம் இல்லை. நாட்டில் அரசமைப்புக்குப் பொருள் கோடல் உட்பட உச்ச நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்துக்குத்தான் உண்டு. தேவையானால் - காத்திரமான காரணங்கள் இருந்தால் - அவற்றின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் பணிப்புரை தொடர்பில் மீளாய்வு மனு ஒன்றை உயர்நீதிமன்றத்திலேயே செய்யலாம். அதுகூட விசேடமான புறக் காரணங்கள் இருந்தால் மட்டுமே சாத்தியம்.

இந்த வழக்கிலும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவு - கட்டளை - இறுதியானது. ஆனால் தந்திரமான முறையில் அந்த உத்தரவை மீளாய்வுக்கு உட்படுத்தக் காய் நகர்த்துகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. - அது ஒன்று.

அடுத்தது - தான் முரண்படும் தரப்புக்கள், கட்சிகளை உட்புகுந்து பிளவுபடுத்துவது அவரின் பண்பியல்பு. புலிகள் வரை தரப்புக்களைப் பிளந்த சாதனைச் சரித்திரம் படைத்த கிழட்டு நரி அவர். அதே தந்திரத்தை உயர் நீதிமன்றத்துக்குள்ளும் - அதுவும் இதே பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான கட்டளையையொட்டி - அவர் நகர்த்துகின்றார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மற்றும் அரசமைப்புக்கு பொருள் கோடல் போன்றவற்றில் தனக்கு இருக்கும் சந்தேகங்களை தேவைப்பட்டால் ஜனாதிபதி எழுத்து மூலம் உயர் நீதிமன்றத்திடம் கேட்கலாம். உயர்நீதிமன்றம் அது குறித்துக் கூடி, ஆராய்ந்து, ஜனாதிபதிக்கு விளக்கம் தரும். இது ஜனாதிபதிக்குரிய 'விசேட ஆலோசனை நியாயாதிக்க' ஏற்பாடாகும். இப்படி உயர் நீதிமன்றம் வழங்கும் பரிந்துரை வெறும் ஆலோசனை மட்டுமே. அது யாரையும் கட்டுப்படுத்தும் தீர்ப்போ - உத்தரவோ - அல்ல.

இப்போது பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக எகிறிக் குதிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை ஒட்டி உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை நியாயாதிக்கத்தின் கீழ் சில விடயங்களை உயர்நீதிமன்றத்திடம் கேட்கத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிகின்றது. ஒரு வகையில் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான விடயங்களை உயர் நீதிமன்றத்தின் பிறிதொரு ஆயத்தின் ஊடாக கருத்து கேட்க அவர் விழைகிறார்.

"அரசமைப்புக் கவுன்ஸிலில் வாக்களிப்புக்கு வருகை தராதோரின் கருத்தை எதிர்ப்பு வாக்கு என்று கருதுவதா? அல்லது ஆதரவு வாக்கு என்று கருதுவதா? அரசமைப்புக் கவுன்ஸிலின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி செய்த நியமனத்தை உயர் நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்தலாமா?" - என்பன போன்ற கேள்விகளே அவற்றில் இடம்பெற உள்ளன என்று தெரிகின்றது.

ஆக, இது ஒரு வகையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு ஒரு மேன்முறையீட்டை விசாரிக்க செய்யும் முயற்சி. உயர் நீதிமன்றத்தைக் கட்டாயப்படுத்தும் தந்திரம். இவ்விடயத்தில் ஏற்கனவே உயர் நீதிமன்றத்தின் ஆயம் ஒன்று வழங்கிய கட்டளைக்கு - பணிப்புரைக்கு - மாறான நிலைப்பாட்டை இன்னொரு ஆயத்தின் மூலம் எடுக்க வைத்து, உயர்நீதிமன்றத்துக்குள்ளும் பிரிவினையை ஏற்படுத்தும் சதித் திட்டம்.

தமது ஆட்சி காலத்தின் முடிவில் உயர்நீதிமன்றத்திடம் அவர் சரியான பாடம் படிப்பார் என எதிர்பார்க்கலாம்.




# காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியால் தீர்வு தர முடியுமா?

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் ஆதங்கம்






**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

நாட்டில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என்று மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் இன்று (28) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (28) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கை அரசும் சரி சர்வதேசமும் எங்களை ஒரு தடவையாவது திரும்பி பார்க்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாத முடிவில் வடக்கு கிழக்கில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.

ஆனால் எங்களை ஒருவருமே திரும்பி பார்ப்பதாகத் தெரியவில்லை. எனினும் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வீதியில் இறங்கிப் போராடி வருகிறோம். ஆனால் நீதிக்காக ஏங்கி போராடி வருகின்ற அம்மாக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் சாட்சிகளும் மறைக்கப்பட்டு கொண்டு செல்கிறது.

அதனையே இந்த அரசும் விரும்புகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை மாவட்ட ரீதியாக ஸ்தாபித்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு 2 லட்சம் ரூபா கொடுப்பதாக கூறுகின்றனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இந்த பணத்தை வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையை கண்டறிவோம் என கூறப்பட்டுள்ள போதும் இது வரை உண்மையை கண்டறிய முன் வரவில்லை.ஆனால் இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

நாங்கள் நஷ்ட ஈட்டை பெற்றுக் கொண்டு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே ஓ.எம்.பியின் நோக்கமாக உள்ளது.

எமது பிள்ளையின் உயிர் 2 லட்சம் பெறுமதி இல்லை. எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் 4 லட்சம் எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் இடம் பெற உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியால் தீர்வு தர முடியுமா?, நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் போன எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம்.நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் உள்ளோம்.

ஆனால் இது வரையில் எந்த ஜனாதிபதியும் எமக்கான பதிலை வழங்கவில்லை.தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளையும்,உறவுகளையும் மீட்டுத் தருவாரா?அல்லது எமது உறவுகளுக்கு நீதி கிடைக்குமா?,அல்லது இருக்கின்ற இடத்தை கண்டுபிடித்து தருவாரா?,அந்த எதிர்பார்ப்புக்கள் உடனே இன்றுவரை போராடி வருகிறோம்.

இலங்கை அரசியலில் நம்பிக்கை இல்லை. இவ்வாறான காரணங்களாலேயே சர்வதேச விசாரணை கோரி போராட்டம் முன்னெடுத்து வருகிறோம்.-என்றார்.



# உலக இயற்கையைப் பாதுகாக்கும் தினத்தில் தேசிய இளைஞர் சேவையினர் சிரமதானம்!

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து, ஜுலை - 28 உலக இயற்கையைப் பாதுகாக்கும் தினத்தை முன்னிட்டு "இயற்கையைப் பாதுகாப்போம் - பொலித்தீன் அற்ற எமது நகரம்" எனும் கருப்பொருளில் சிரமதானப் பணியை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை (28) முன்னெடுத்தனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த குணரட்ணவின் ஆலோசனைக்கமைவாக சகல மாவட்டங்களிலும் இந்த திகழ்வு இடம் பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளரும் மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தருமான எம். சசிகுமார் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு லகூண் பூங்கா வாவியோரம் மற்றும் ஊறணி வாவிக் கரை பகுதியில் காணப்பட்ட பிளாஸ்டிக், பொலித்தீன் பொருள்கள் இளைஞர் யுவதிகளால் அகற்றி சுத்தம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட உதவிப் பணப்பாளர் நிசாந்தி அருள்மொழி, மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் சதீஸ்வரி கிருபாகன், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து இளைஞர், யுவதிகள் இந்தச் சிரமதான வேலைத் திட்டத்தில் இணைந்து கொண்டனர்.







# அம்பாறை கரையோரப் பிரதேச தேசிய மக்கள் சக்தியின் சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான செயற்குழு உறுப்பினர்களை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் தோழர் டில்வின் சில்வா சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வு மாளிகைக்காடு வாவா றோயல் வரவேற்பு மண்டபம் நேற்று சனிக்கிழமை (27) நடைபெற்றது.








# சம்மாந்துறை பட்டதாரிகள் அமைப்பால் உயர்தர மாணவர்களுக்குச் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த முறை கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சை எழுதவுள்ள மாண வர்களுக்கும் மற்றும் 2025, 2026 இல் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக் குமான பௌதீகவியல் செயன் முறைப் பயிற்சி முகாமொன்று பொறி யியல் மற்றும் மருத்துவ துறைக்கான பட்டதாரிகள் அமைப்பால் பாடசாலை களின் அதிபர்களின் பூரண ஒத் துழைப்புடன் நடத்தப்பட்டது.



செய்முறை செயற்றிட்டத்தை பாட சாலை ஆசிரியர்கள் மற்றும் பட்ட தாரி அமைப்பின் அங்கத்தவர்கள் செயற்படுத்தினர்.

இந்தச் செயன்முறை செயற்றிட்டத்தில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் அல் மர்ஜான் பெண்கள் உயர் பாடசாலை மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

# கிழக்கு மாகாண மட்ட பூப்பந்தாட்டம்: கல்முனை ஸாஹிறா ஆண்கள் வெற்றி




(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை மெக்கெய்ஸர் விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடி 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அடைவுக்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து ஆலோசனைகளை யும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சமூகம் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வழிப்படுத்திய பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர்களான ஏ.எம். அப்ரார நிலா, எம்.எச்.எம்.முஸ்தான் ஸிர் மற்றும் போட்டிகளில் பங்கேற்று தமது உச்சத் திறமைகளை வெளிக்காட் டிய மாணவர்களுக்கும் பாராட்டுக்களை யும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.



# கல்முனை தெற்கு சுகாதார பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை!

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவு கையாளும் நிறுவனங்களின் ஊடாக பொது மக்களுக்குத் தரமான மற்றும் சுத்தமான உணவுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் குறித்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் பிராந்திய சுற்றுச் சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொண்ட சோதனையின் போது இஞ்சி போன்ற ஒருவகை கிழங்கு மீட்கப்பட்டது.

இதன்போது உணவுப் பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை பேணி நடக்காத உணவகங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் முறையற்ற களஞ்சியத்தை கொண்டிருந்த உணவுகளும் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

உணவு தயாரிப்பதற்குப் பொருத்தமற்ற பாத்திரங்களும் அகற்றப்பட்டன.

அத்துடன் உணவகங்களைச் சுத்தமாக வைத்திருத்தல், உணவு வகைகளை முறையாக கையாளுதல், உணவுகளைக் குளிர்சாதனப் பெட்டிகளில் நீண்ட நாள்களுக்கு தேக்கி வைக்காதிருத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்ற சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும் ஆலோசனைகள் வழங்கப் பட்டது. சில உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உட்பட கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு மூன்று நாள் செயலமர்வு நாளை ஆரம்பம்

(எம். எப். றிபாஸ்)

'எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல்' எனும் தொனிப்பொருளில் சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் யுனிசெப் நிதி உதவியுடன் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு மூன்று நாள் செயலமர்வு நாளை (29) மட்டக்களப்பில் ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கிரீன் காடன் ஹோட்டலில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று தினங்கள் இடம் பெறவுள்ள இந்தச் செயலமர்வில் கிழக்கு மாகாணத்திலிருந்து சுமார் நாற்பது ஆண், பெண் ஊடகவியலாளர்ள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர் உரிமை சமவாயம், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய ஊடகங்களின் தாக்கம், சிறுவர் வன்முறைக்கு எதிராக புகாரளித்தலில் உள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகள், சிறுவர் வன்முறைக்கு எதிரான செய்தி அறிக்கை, துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்களை நேர்காணல், நேரலை சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற மேலும் பல பயன் தரும் கலந்துரையாடல்களும் நடைபெறவுள்ளன.





# போசாக்கு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு விவசாய, கால்நடை திணைக்களங்கள் கலந்தாய்வு

(றியாஸ் ஆதம்)




கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாடுகளின் நிலைமை தொடர்பாக தெளிவூட்டி அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகளுடனான உயர்மட்ட கலந்துரையாடல் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாடு அதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் இதன்போது தெளிவாக விளக்கினார்.

எதிர்காலத்தில் உணவு உற்பத்தியும் உணவு உற்பத்தி செய்வதற்கான தொழிநுட்ப உதவிகளையும் விவசாய மற்றும் கால்நடைத் திணைக்களங்கள் வழங்குமிடத்து கல்முனைப் பிராந்தியத்தில் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை உள்ளதாகவும் டாக்டர் றிஸ்பின் குறிப்பிட்டார்.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளின் பிரகாரம் போஷாக்கு குறைபாடுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு கால்நடை திணைக்களத்தின் ஊடாக கோழிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் உணவு உற்பத்தியை அதிகரித்து அவர்களின் வருமானத்தை கூட்டுவதற்கான திட்டங்களும் தொடர்ச்சியாக வழங்குவதாக இதன்போது கால்நடை திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர்.

போசாக்குள்ள உணவுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இறக்காமம் பிரதேசத்தில் சுமார் 500 ஏக்கர் காணியில் பாசிப்பயறு செய்கை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும், நிந்தவூர் பிரதேசத்தில் 4 நிறங்களைக் கொண்ட சோளச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு இந்த வாரம் அறுவடை செய்யப்படவுள்ளதாகவும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

குறித்த உற்பத்தியினை நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாக செய்து இந்தப் பிராந்தியத்தில் உள்ள போசாக்கு குறைபாட்டையும் வறுமையையும் போக்குவதற்குக் குறித்த இரண்டு திணைக்களங்களும் உதவுவதாக இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலைகளில் போசாக்குள்ள உணவுகளை ஊக்கப்படுத்தும் முகமாக விவசாய போதனாசிரியர்கள் ஊடாக விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடாத்துதல்.

பாடசாலைகளில் வழங்கப்படும் காலை உணவுகளில் இரண்டு தினங்கள் பசுப்பால் மற்றும் முட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் பாடசாலையில் மாதிரி சிற்றூண்டிச்சாலை மற்றும் மாதிரி பாடசாலை தோட்டம் ஒன்றையும் முதல் கட்டமாக ஆரம்பித்தல்.

போசாக்குள்ள ஆரோக்கிய உணவுகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய இயற்கையான உணவுகளை விற்பனை செய்வதற்கான நிலையம் ஒன்றைக் கரையோர பிராந்தியத்தில் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



# மட்டு.மாமாங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் உள்ளூர் மரக்கன்று விழிப்புணர்வுக் கண்காட்சி!

(பழுவூரான்)

சிறுவர்கள் இளையோர்களுக் கான மூன்றாவது கண் நண்பர்களின் ஒழுங்கு படுத்தலில் மட்டக்களப்பு மாமாங் கேஸ்வரர் ஆலய உற்சவத்தை முன் னிட்டு ஆலய வளாகத்தில் நேற்று சனிக் கிழமையும் (27), இன்று ஞாயிற்றுக் கிழமையும் (28) காணாமலாக்கப்பட்ட, அருந்தலாக்கப்பட்ட மரபார்ந்த உள்ளூர் மரக்கன்றுகள், செடிகள், விதைகள், கனிவகைகளை "அறிவோம் பகிர் வோம்" எனும் தொனிப்பொருளில் விழிப் புணர்வுக் கண்காட்சியை நடத்தியது.

"இவை பற்றி அறிந்த அனுபவமுள்ள மூத்தவர்கள் வாருங்கள்", "மூத்தவர் களை அழைத்து வாருங்கள்" என "நன்னிலம்" உள்ளூர் தாவரங்களை மீளுருவாக்குதலும் பரவலாக்குதலும் செயற்பாட்டாளர் திருமதி சிந்து உஷா விஜேந்திரன் அழைப்பு விடுத்துள் ளார்.

இந்த அமைப்பு நெசவு நிலைய வீதி, மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு எனும் இடத்தில் நன்னில செயற்களத்தில் மரபு முறைப்படி உற்பத்தி செய்யப்பட்ட மரக்கன்றுகளை திணைக்களங்களுக் கும், வணக்க ஸ்தலங்களுக்கும், பொது இடங்களுக்கும் விநியோகம் செய்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது .

பேராசிரியர் சி.ஜெயசங்கர் இந் நிகழ்வுக்கு பிரதான ஆலோசகராக செயலாற்றினார்.









# அதிகஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கிவைப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் அதி கஷ்டப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கல்முனை றோட்டரிக் கழகத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் வித்தியாலயம், றொட்டை அ.த.க.பாடசாலை, கோளா வில் பெருநாவலர் வித்தியாலயம், சம்மாந்துறை இஸ்மாயில் வித்தியா லயம், பாணமை அ.த.க. பாடசாலை, சவளக்கடை கணேசா வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளின் 475 மாணவர்களுக்கு 2500 அப்பியாசக் கொப்பிகள் கல்முனை றோட்டரிக் கழகத்தால் நேற்று முன்தினம் வழங்கப் பட்டன.

கல்முனை றோட்டரி கழகத்தின் 2024 - 25 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் பொறியியலாளர் றோட்டரியன் என். றதீசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் செயலாளர் மு. சிவபாத சுந்தரம், அங்கத்தவர்கள் மு. அமிர்த சங்கர், க. வினோத் மற்றும் எஸ். ரவிச் சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியை ஆஸ்திரேலிய றோட்டரிக்கழகம் கன்பேரா வெஸ்ட்ரன் கிறீக் வழங்கியுள்ளது.



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தது நிரந்தர மின்பிறப்பாக்கி

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் புதிய கட்டடப் பிரிவுக் கான நிரந்தர மின்பிறப்பாக்கி நேற்று (27) சனிக்கிழமை காலை சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையை வந்தடைந்தது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தை ஆரம்பிப்பதற் கான மின்பிறப்பாக்கி இல்லாததன் காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடத்தை இயக்க முடியாத நிலைமை வருடக் கணக்கில் இருந்து வந்தது.

இந்த நிலையில் 400 கிலோ வாற்ஸ் வலுவுடைய நிரந்தர மின்பிறப் பாக்கி வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர்வரும் வாரத்தில் இருந்து குறித்த மின்பிறப்பாக்கி பயன்பாட்டுக்கு வரும் எனவும் அது வரை தற்போதைய தற்காலிக மின் பிறப்பாக்கி பயன்பாட்டில் இருக்கும் எனவும் வைத்தியசாலையின் வைத் திய அத்தியட்சகர் ரஜீவ் தெரிவித்துள் ளார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை, விபத்து, அவசர சிகிச்சை!

## அடுத்தவாராம் சேவைகள் ஆரம்பமாகும் என்கிறார் டாக்டர் ரஜீவ்

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளன என்று வைத் திய அத்தியட்சகர் ரஜீவ் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவற்றை இயக்க ஆளணி மற்றும் மின்சாரம் தடைப்படும் வேளையில் மாற்றீடான மின்பிறப்பாக்கி ஆகியன அவசியமானதாக காணப்பட்டன.

தற்போது 400 கிலோ வாற்ஸ் வலு வுடைய நிரந்தர மின்பிறப்பாக்கி கிடைக் கப்பெற்றுள்ளது.

அதேவேளை, ஒருசில ஆளணிப் பற்றாக்குறையும் அடுத்த வாரம் அள வில் நிரப்பப்படும். எனவே அடுத்த



வார நடுப்பகுதியில் புதிய அலகுகளை இயக்க உத்தேசித்துள்ளோம்.

அதேவேளை இன்று ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன மீண்டும் வைத்தியசாலையின் முன் பகுதிக்கு மாற்றப்படவுள்ளன என்று அவர் தெரிவித்திருந்தார்.

# மேட்டூர் அணை திறப்பு குறித்து முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

மேட்டூர் அணையை திறப்பது தொடர்பில் அமைச்சர் துரைமுருகன், டெல்டா மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்டோருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கர்நாடக, கேரள மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகள் நிரம்பின.

இதையடுத்து, கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து வினாடிக்கு ஒரு லட்சத்து 981 கன அடியும், கபினி அணையில் இருந்து வினாடிக்கு 33 ஆயிரம் கனஅடியும் என மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 983 கனஅடி தண்ணீர் நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்றுமுன்தினம் இரவு 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு ஒரு லட்சம் கனஅடியை தாண்டியது. இதனால், காவிரி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளை மூழ்கடித்தவாறு தண்ணீர் சீறிப்பாய்ந்து செல்கிறது. இதனால் ஒகேனக்கல்லில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காவிரி கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இதனிடையே கர்நாடக அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர் பிலிகுண்டுலுவை கடந்து தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணையை வந்து அடைகிறது. கடந்த வெள்ளிக் கிழமை 90 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று முன் தினம் இரவு 95.50 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

நேற்று காலை நிலவரப்படி கர்நாடகாவில் உள்ள கே.ஆர்.எஸ். அணையில் இருந்து மட்டும் 1.30 லட்சம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து 45 ஆயிரம் கன அடியில் இருந்து 94 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் தற்போதைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது. அதாவது 405 நாள்களுக்கு பிறகு அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது.

71 ஆவது முறையாக 100 அடியை எட்டியதை தொடர்ந்து, அணையில் விவசாயிகள் பூஜைகள் செய்து காவிரியை வழிபட்டனர். கடந்த 4 ஆம் திகதி 39.67 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 23 நாள்களில் 60 அடி வரை உயர்ந்துள்ளது. தொடர்ந்து நீர் திறப்பு அதிகரிக்கும் பட்சத்தில் மேட்டூர் அணை ஒரு வாரத்துக்குள் தனது முழு கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதற்கிடையே, மேட்டூர் அணை நீர் திறப்பு குறித்தும் காவிரி டெல்டாபகுதியைசேர்ந்தமாவட்டஆட்சியர்களுடன் சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நீர்வளத்துறை செயலாளர் மணிவாசகம், மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

## ஜம்மு – காஷ்மீர் தாக்குதல்: தீவிரவாதிகள் படங்களை வெளியிட்டனர் பொலிஸார்



இந்தியாவின் காஷ்மீரில் தாக்குதல் நடத்திய 3 தீவிரவாதிகளின் வரைபடங்களை வெளியிட்ட ஜம்மு – காஷ்மீர் பொலிஸார், இந்திய மதிப்பில் தலா 15 லட்சம் ரூபா பரிசையும் அறிவித்துள்ளனர்.

ஜம்மு – காஷ்மீரில் கடந்த ஜூன் மாதம் முதல் தீவிரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என இந்தியசெய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கடந்த 16 ஆம் திகதி தோடா மாவட்டத்தில் இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில், 3 தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளநிலையில், அவர்களின்உருவ படத்தை ஜம்மு காஷ்மீர் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் பற்றி தகவல் அளிக்கும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள பொலிஸார், தகவல் தெரிவிப்பவர்களின் விபரங்கள் இரகசியம் பேணப்படும் எனவும் உறுதியளித்துள்ளனர்.

## தடுப்பணைகள் அமைத்து தண்ணீரை சேமிக்க வேண்டும்

### தமிழக அரசுக்கு தே.மு.தி.க. வலியுறுத்தல்

தமிழகத்தில்தடுப்பணைகள்அமைத்து, தண்ணீரை சேமிக்க தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“விவசாய மக்களுக்கு தேவையான தண்ணீரை கேட்ட போது கொடுக்காத கர்நாடகா, தானாக முன்வந்து அணைகளை திறந்து தண்ணீரை தந்துள்ளது. இயற்கையின் முன் அனைவரும் சமம் என்பதை இந்த நிகழ்வு நிரூபித்துள்ளது.

ஒரு டி.எம்.சி. தண்ணீரை தினந்தோறும் தமிழகத்துக்கு தரவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தும், உடன்படாத கர்நாடக அரசு இயற்கை அன்னையின் முன் மண்டியிட்டு உள்ளது. ஒரு டி.எம்.சி. தண்ணீர் தர மறுத்த போது, ஒரு லட்சம் கண அடி தண்ணீர் திறந்து விடக்கூடிய சூழலை உருவாக்கி, இன்றைக்கு தமிழகத்தின் அனைத்து அணைகளும் நிரம்ப செய்துள்ளது. இதை பார்க்கும் பொழுது அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தி.மு.க. அரசு காவிரி விவகாரத்தில் ஜுலை 16 ஆம் திகதி அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டியும், இந்திய பிரதமரை நேரடியாக சென்று சந்தித்து காவிரி விவகாரம் குறித்து முறையிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியும்,



கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியை வலியுறுத்த முடியாமலும், உச்ச நீதிமன்றம் சென்றும் காவிரி விவகாரத்தில் எதையும் சாதிக்க முடியத நிலையில், இனிமேலாவது நீண்ட தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து இயற்கை அன்னை நமக்கு கொடையாக வழங்கி வரும் தண்ணீரை சேமித்து யாருடைய தயவையும் எதிர்பாராமல் தொலைநோக்கு பார்வையோடு நமக்கு கிடைக்கும் தண்ணீர் வீணாக கடலில் கலக்காமல் தடுக்க, தடுப்பணைகளை அமைத்து தண்ணீரை சேமிப்பது, விவசாயத்திற்கும், தொழில்களுக்கும், குடி தண்ணீருக்கும் யாரிடமும் இனிவரும் காலங்களில் மண்டியிடாத தன்னிறைவு பெற்ற நாடாக தமிழ்நாட்டை இந்த அரசு கொண்டு வர வேண்டும்.

நாங்கள் தி.மு.க. டெல்டா காரங்க தான் என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழக முதல்வர் ஸ்டாலின், டெல்டா பகுதி விவசாயிகளை மட்டுமல்லாமல் தமிழக விவசாயிகள் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.



# இஸ்ரேல் மீது பாரிய தாக்குதல்; 10 பேர் பலி; 20 பேர் காயம்

இஸ்ரேல் மீது பாரிய ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய பாரிய ஏவுகணை தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலை அடுத்து அமெரிக்காவிற்கு சென்றுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனடியாக நாடு திரும்புகிறார் என அவருடைய அலுவலம் தெரிவித்து உள்ளது.

தெற்கு லெபனான் மீது வான் வழியே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில், ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர்.

அதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இந்த ராக்கெட் தாக்குதல் பற்றி ஹிஸ்புல்லா அமைப்பினர் கூறும்போது, லெபனானில் கிராமம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் அதற்கு பதிலடியாக, கோலன் ஹைட்சில் உள்ள இராணுவ தளம் மீது தாக்குதல் நடத்தினோம் என தெரிவித்தது.

எனினும், இஸ்ரேலின் இராணுவ பேச்சாளர் டானியல் ஹகாரி கூறும்போது, ஹிஸ்புல்லா அமைப்பு பொய் கூறுகிறது. உயிரிழந்தவர்கள் அனைவரும் 10 முதல் 20 வயதுக்கு உட்பட்டவர்கள். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர் என கூறியுள்ளார்.

அந்த அமைப்பின் முக்கிய தளபதிகளுக்கு எதிராக போர் தொடுக்கும்படி இஸ்ரேல் தலைவர்களிடம் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் நெருக்கடி எழுந்துள்ளது. இஸ்ரேல் மீது நடந்த இந்த கொடிய தாக்குதலால், அந்த பகுதியில் பதற்றம் தொற்றிக் கொண்டுள்ளது.





# ஈரானில் உள்ள பொதுமக்களுக்கு வீடுகளை விட்டு வெளியேற தடை

ஈரானில் கடுமையான வெப்ப அலை காரணமாக பொதுமக்களை மாலை 05 மணி வரை வீடுகளை விட்டு வெளியே வர அரசு தடை விதித்துள்ளது.

அத்துடன், அரசு அலுவலகங்கள், வங்கிகளை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஈரானில் கடந்த சில நாள்களாக கடுமையான வெப்ப அலை வீசி வருகிறது. தலைநகர் தெஹ்ரானில் நேற்று 42 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகிய நிலையில், கடுமையான வெப்பம் காரணமாக அரசு அலுவலகங்கள், வங்கிகள், பொது துறை நிறுவனங்களின் அலுவலக நேரம் பாதியாக குறைக்கப்பட்டது.

கடுமையான வெப்பத்தில் இருந்து மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும், ஆற்றலை சேமிக்கவும் நாடு முழுவதும் வங்கிகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாலை 5 மணி வரை பொது வெளியில் நடமாட வேண்டாம் என மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் வெப்ப அலை காரணமாக மின் நுகர்வு அதிகரித்துள்ளதாகவும் கடந்த செவ்வாய்கிழமையன்று மின்நுகர்வு 78,106 மெகாவாட் என்ற சாதனை அளவை எட்டியதாகவும் ஈரான் செய்தி நிறுவனம் இர்னா தெரிவித்துள்ளது.

# 24 மணிநேரத்தில் மூன்றாவது முறையாக அமெரிக்க படைத்தளம் மீது தாக்குதல்



கிழக்கு சிரியாவில் அமெரிக்கப் படைகள் தங்கியிருக்கும் இராணுவ தளம் கடந்த 24 மணி நேரத்தில் மூன்றாவது முறையாக தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக ஊடகங்கள் இன்று அதிகாலை தெரிவித்துள்ளன.

பெய்ரூட்டை தளமாகக் கொண்ட அல் மயாதீன் செய்தி நிறுவனத்தின்படி, டெய்ர் அல்-ஜோரில் உள்ள கொனோகோ எரிவாயு வயலில் அமைந்துள்ள தளம் மூன்று முறை ரொக்கெட் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவித்துள்ளது.

பதிலுக்கு அமெரிக்கப் படைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன. அவர்களின் விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகள் தளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மேலே நகர்ந்ததாக அந்த செய்தி நிறுவனம் கூறியது.

ரொக்கெட் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் சமீபத்திய மாதங்களில் இதே போன்ற சம்பவங்கள் அண்டை நாடான ஈராக்கை தளமாகக் கொண்ட எதிர்ப்புக் குழுக்களால் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய எதிர்ப்புக் குழுக்களும் காசா பகுதியில் நடந்து வரும் போரில் இஸ்ரேலிய ஆட்சிக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆதரவிற்காக கடும் கோபமடைந்துள்ளன.

பக்கங்கள் 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 28/07/2024

## கோடையில் ரம்மியமான வார இறுதி கடக்கின்றது

ஒன்ராறியோ, ஜூலை 28

ஒன்ராறியோ, கியூபெக் மற்றும் அட்லாண்டிக் கனடாவின் பெரும்பகுதி முழுவதும் இந்த கோடையில் இதுவரை வந்த மிக ரம்மியமான வார இறுதி 02




# ஜெஸ்பர் நகரக் காட்டுத்தீ சில மாதங்கள் தொடரும்!

அல்பர்ட்டா, ஜூலை 28

ஜெஸ்பர் நகரில் நூற்றுக்கணக்கான கட்டமைப்புகளை அழித்த காட்டுத்தீ மற்றும் தேசிய பூங்காவில் கட்டுப்பாட்டை மீறி எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீ, இன்னும் சில மாதங்களாக எரியும் என்று கனடா பார்க்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

‘இந்த தீ கடந்த 100 ஆண்டுகளில் ஜெஸ்பர் தேசிய பூங்கா பதிவு செய்த மிகப்பெரிய தீ’ என்று மத்திய நிறுவனத்தின் துணை சம்பவ தளபதி லாண்டன் ஷெப்பர்ட் சனிக்கிழமை பிற்பகல் அல்டாவின் ஹின்டனில் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. 02

# கிழக்கு ப்ரேரிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்ற புயல் அச்சுறுத்தல்கள்

வின்னிபெக், ஜூலை 28


கிழக்கு ப்ரேரிகளில் புயல் அச்சுறுத்தல் இன்னும் முடிவடையவில்லை.

ஏனெனில் நீடித்த எல்லையானது இரவு முழுவதும் பலத்த முதல் கடுமையான இடியுடன் கூடிய மழையைத் தூண்டுகிறது.

உங்கள் வீடு, அலுவலகம் அல்லது நீங்கள் வாகனம் ஓட்டும் போது கடுமையான வானிலை அச்சுறுத்தும் பட்சத்தில் பாதுகாப்பான தங்குமிடம் தேடுவதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள் ஒன்று ஆலோசனை கூறப்படுகின்றது.

கிழக்கு ப்ரேரிஸ் முழுவதும் இரவு நேர புயல்கள் நீடிக்கின்றன.

கடுமையான இடியுடன் கூடிய மழை எச்சரிக்கைக்கு மத்தியில் வடமேற்கு ஒன்டாரியோவில் சனிக்கிழமை பகல் முழுவதும் இடியுடன் கூடிய மழை பெய்தது. 02





# கொவிட் கால ஆர்ப்பாட்டம் குற்றவியல் விசாரணை முடிவு

ஒன்ராரியோ, ஜூலை 28

2022ஆம் ஆண்டு 'ஃப்ரீடொம் கான்வாய்' (சுதந்திரத் தொடரணி) இன் முக்கிய அமைப்பாளரின் குற்றவியல் விசாரணையின் இறுதி கட்டம் நேற்று இடம்பெற்றது.


கொவிட்-19 பொதுச் சுகாதாரக் கட்டுப்பாடுகளை எதிர்த்து, ஒட்டாவாவில் நடந்த மூன்று வார ஆர்ப்பாட்டத்தின் போது, அல்பர்ட்டாவில் வசிக்கும் பாட் கிங் அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்தார் எனப் பாதுகாப்புத் துறை கூறுகிறது.

இதற்கிடையில், அந்த ஆர்ப்பாட்டத்தில் அவர் ஒரு தலைவராக இருந்தார் என அரச தரப்புக் குற்றம் சாட்டுகிறது.

மேலும் அது நகரத்திற்கும் அருகில் வசித்த மற்றும் வேலை செய்த மக்களுக்கும் ஏற்படுத்திய இடையூறுகளுக்கு முக்கிய காரணமாக இருந்தது.

கிங் தவறான செயல்களில் ஈடுபடவில்லை, மற்றவர்களுக்கு தீங்கு செய்ய அறிவுரை வழங்கினார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் ஒக்டோபர் 4ஆம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.







## கோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வார இறுதியில் பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேர்ட்டா மற்றும் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகள் முழுவதும் நூற்றுக்கணக்கான காட்டுத் தீ எரிகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியா காட்டுத்தீ சேவையானது சனிக்கிழமை பிற்பகல் வரை மாகாணம் முழுவதும் 386 செயலில் தீ ஏற்பட்டதாக அறிவித்தது.

சசகெச்சுவான், வடமேற்கு பிரதேசங்கள் மற்றும் யூகோன் முழுவதும் பெரும் எண்ணிக்கையிலான தீப்பற்றுடன், வார இறுதியில் தொடங்குவதற்கு சுமார் 153 தீப்பிடித்ததாக அல்பர்ட்டா அறிவித்தது.

கூடுதலாக, வடக்கு கலிபோர்னியாவில் ஏற்பட்ட மிகப் பெரிய தீ இந்த வார இறுதியில் கனடாவில் எல்லையைக் கடக்கும் புகையின் கணிசமான பகுதிக்குக் காரணமாகும்.

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியின் மீது நீண்டுகொண்டிருக்கும் எல்லையானது, மாலை மற்றும் இரவு நேரங்களில் சனிக்கிழமை பிற்பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை இரண்டாம் சுற்று இடியுடன் கூடிய மழையைத் தூண்டும்.

சூரியன் மறையும் போது சூறாவளி அச்சுறுத்தல் குறையும் என்றாலும், இந்த இரண்டாம் சுற்று ஒரே இரவில் வீசும் புயல்களுடன் கூடுதலான கடுமையான வானிலைக்கு இயக்கவியல் இன்னும் சாதகமாக உள்ளது.

வின்னிபெக்கைச் சுற்றியுள்ள மற்றும் தெற்கே உள்ள மக்கள் இன்று மாலை 9:00 முதல் 10:00 மணி வரை கடுமையான இடியுடன் கூடிய மழையைக் காணலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜெஸ்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் சுமார் ஒன்றரை நாள்களில் சுமார் 12 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது, அது நன்றாக இருந்தாலும், சமூகத்திற்கு அருகில் இன்னும் சுறுசுறுப்பான ஹொட்ஸ்பொட்கள் உள்ளன என ஷெப்பர்ட் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த வாரம் இருந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், தீ நடவடிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என அவர் கூறியுள்ளார்.



# பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு; சர்வதேச நீதிமன்றுக்கு உரிய பதில் கூறுங்கள்!

## கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு

ஒன்ராரியோ, ஜூலை 28

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேல் இருப்பது சட்டவிரோதமானது என்றும் அது குறித்து முடிவுக்கு வரவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட நீதிமன்றத்தின் சமீபத்திய ஆலோசனைக் கருத்துக்கு இஸ்ரேல் 'கணிசமான முறையில் பதிலளிக்க வேண்டும்' என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தின் கட்டுப்பாடற்ற கருத்து, 57 ஆண்டுகளுக்கு முன்பு கைப்பற்றிய நிலங்கள் மீதான இஸ்ரேலின் ஆட்சிக்கு முன்னோடியில்லாத, கடுமையான கண்டனமாகும்.

வெள்ளிக்கிழமையன்று கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் கூட்டறிக்கையின் ஒரு பகுதியாக நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு ட்ரூடோ பதிலளித்துள்ளார்.

மேற்குக் கரையில் குடியேற்றங்களை மாற்றியமைக்கவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

'தீவிரவாத குடியேற்றவாசிகளால் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக நடந்து வரும் வன்முறைச் செயல்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும், மேற்குக் கரையில் சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமான குடியேற்றங்களின் சாதனை விரிவாக்கத்தை மாற்றியமைக்கவும் இஸ்ரேலுக்கு அழைப்பு விடுக்கிறோம் ' என பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# றொபின்சன் உடன்படிக்கைகளை நிறைவேற்ற நீதிமன்றம் உத்தரவு!

## கனடிய மற்றும் ஒன்டாரியோ அரசாங்கங்களுக்குப் பணிப்பு



ஒன்ராரியோ, ஜூலை 28

ஒன்ராரியோவில் உள்ள அனிஷனாபேக்கு 150 ஆண்டுகளாக முதல் நாடுகளுக்கான வருடாந்த கொடுப்பனவுகளை முடக்கியதன் மூலம் அரசு அதன் ஒப்பந்த வாக்குறுதியை கேலி செய்துள்ளது எனவும், அது இப்போது விடயங்களைச் சரியாகச் செய்ய வேண்டும் என்று கனடாவின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

றொபின்சன் உடன்படிக்கைகள் வழக்கில் கடந்த 26ஆம் திகதி உச்ச நீதிமன்றம் ஒருமனதாக முடிவெடுத்தது,

கனடிய மற்றும் ஒன்டாரியோ அரசாங்கங்கள் பூர்வீகக் குடிகளின் ஒரு குழுவுடன் ஆறு மாதங்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இரண்டு ஒப்பந்தங்கள் 1850 இல் கையெழுத்திடப்பட்டன, ஹூரோன் ஏரியின் அனிஷனாபே மற்றும் லேக் சுப்பீரியர் ஆகியவற்றின் வருடாந்த கொடுப்பனவுகளுக்கு ஈடாக, மேல் கிரேட் லேக்ஸ் பகுதியில் உள்ள 100,000 சதுர கிலோமீட்டர் நிலத்தை அரசுக்கு விட்டுக்கொடுத்தது.

அரசு நட்டம் அடையாத வரை, நிலத்தில் வளங்கள் உருவாக்கப்பட்டதால், காலப்போக்கில் கொடுப்பனவுகள் அதிகரிக்க வேண்டும் என்று ஒப்பந்தங்கள் கூறுகின்றன.




# பிக்கரிங் பொலிஸ் நிலையத்திற்குள் நேற்று நுழைந்த துப்பாக்கிதாரியுடன் கைகலப்பு!

ஒன்ராரியோ, ஜூலை 28

சனிக்கிழமை பிற்பகல் துப்பாக்கியுடன் பிக்கரிங் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்த ஒருவருடன் நடந்த கைகலப்பில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

டர்ஹாம் பிராந்திய பொலிஸ் அந்த நபர் கிங்ஸ்டன் சாலையில் உள்ள மேற்குப் பிரிவில் மாலை 4:30 மணிக்கு நுழைந்தார் எனக் கூறினார்.

‘சந்தேக நபருக்கும் முன் மேசையில் இருந்த அதிகாரிகளுக்கும் இடையே ஒரு உரையாடல் நடந்தது, இதன் விளைவாக பின்னர் அவர் காவலில் வைக்கப்பட்டார்’ என்று பொலிஸார் அந்த பதிவில் தெரிவித்தனர். சந்தேக நபர் பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும், அவரது காயங்கள் எந்த அளவென்பது தெரியவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ் நிலையம் மூடப்பட்டது. அந்த நிலையத்திற்குள் சந்தேகநபர் எதற்காக நுழைந்தார் என்பது தெரியவில்லை.






# கடையில் வரிசையில் நின்றவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தினாராம்!

## படங்களை வெளியிட்டது டொராண்டோ பொலிஸ்

ஒன்ராரியோ, ஜூலை 28

ஜூலை 25ஆம் திகதி ஸ்கார்ப ரோவில் உள்ள ஒரு கடையில் வரிசையில் நின்று ஒரு நபரை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நபரின் படங் களை டொராண்டோ பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் மற்றும் ஆர்டன் பார்க் ரோடு பகுதிக்கு இரவு 7:15 மணியளவில் அவர்கள் அழைக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு கடையில் ஒரு நபர் வரிசையில் காத்திருந்ததை அதிகாரிகள் அறிந்தனர், அப்போது பின்னால் நின்றவர்களில் ஒருவர் பாலியல் தாக்குதல் நடத்தினார் எனக் கூறப் படுகிறது.



புகைப்படத்தில் உள்ள எஸ்யூவியை சந்தேக நபர் தப்பிச் செல்ல பயன்படுத்தினார் என நம்பப்படுகிறது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

# கனடாவில் மிரட்டிப் பணம் பறிக்கும் குழு இந்திய வம்சாவளியினர் ஆறு பேர் கைது




மிரட்டிப் பணம் பறிக்கும் கும்பலை நடத்தி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் கனடாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார். இது தவிர ஏழாவது நபரை கைது செய்ய பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 25 அன்று, ல் கனடியன் மவுண்டட் காவல்துறை எட்மண்டனில் ஆறு இடங்களில் சோதனை செய்து அவர்களைக் கைது செய்தது. இதில் 100க்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மனிந்தர் சிங் தலிவால் (34), ஜஷந்தீப் கவுர் (19), குர்கரன் சிங் (19), மானவ் ஹீர் (19), பர்மிந்தர் சிங் (21) மற்றும் திவானூர் அஷ்ட் (19) மற்றும் 17 வயதுடைய ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆசிய வர்த்தகர்களை குறிவைத்து இவர்கள் தங்கள் மோசடியை நடத்தி வந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவரும் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த குழுவின் தலைவரான மனிந்தர் சிங் தலிவால் என்பவர் தலைமறைவாக இருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது. ஒக்டோபர் முதல் நகரத்தில் 40 மிரட்டி பணம் பறித்தல் வழக்குகள் பதிவாகியுள்ளன.



# கடந்த 5 ஆண்டுகளில் கனடாவில் 172 இந்திய மாணவர்கள் மரணம்!

## கலங்க வைக்கும் புள்ளிவிவரம்

பல்வேறு காரணங்களுக்காக, வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்பது இன்றைய காலகட்டத்தில் சாதாரணமான ஒரு விடயமாகி விட்டது.

ஆனால், அப்படி கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் எத்தனை பேர் தாங்கள் கல்வி கற்கச் சென்றதன் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளார்கள்?

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், கல்வி கற்பதற்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 633 இந்திய மாணவர்கள் உயிருடன் நாடு திரும்பவில்லை.

அதிகபட்சமாக, கனடாவுக்கு கல்வி கற்கச் சென்ற மாணவர்களில் 172 பேர் மரணம் அடைந்துள்ளனர் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் மழைக்கால கூட்டத்தொடரில் பங்கேற்ற கேரளாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் (Kodikunnil Suresh) என்பவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா சென்றவர்களில் 108 மாணவர்கள், பிரித்தானியா சென்றவர்களில் 58 மாணவர்கள், ஆஸ்திரேலியா சென்றவர்களில் 57 மாணவர்கள், ரஷ்யா சென்றவர்களில் 37 மாணவர்கள், ஜேர்மனி சென்றவர்களில் 24 மாணவர்கள் என மொத்தம் 633 இந்திய மாணவர்கள் உயிருடன் நாடு திரும்பவில்லை.

இவர்களில், கனடாவில் மரணமடைந்த மாணவர்களில் 9 பேர் வன்முறைக்கு பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.